செ.கு. எண்: 193

நாள்: 15.11.2011.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 15.11.2011

ஈரோடு மாவட்டம், **பவானிசாகர் அணையிலிருந்து** காளிங்கராயன் வாய்க்கால் பாசன அமைப்பின்கீழ் இரண்டாம் மற்றும் மூன்றாம் போகப் பாசன சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, ஈரோடு மாவட்ட வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, காளிங்கராயன் வாய்க்கால் பாசன அமைப்பின்கீழ் இரண்டாம் மற்றும் மூன்றாம் போகப் பாசன சாகுபடிக்காக **16.11.2011 முதல்** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், ஈரோடு மாவட்டம், காளிங்கராயன் வாய்க்கால் பாசன அமைப்பின்கீழ் உள்ள **15,743 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9